# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2024 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, சர்வதேச தேரவாத நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

[*2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2024, யூன் மாதம் 20 ஆந் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 30.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2024 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, சர்வதேச தேரவாத நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. (கூட்.) 4/2023

**சர்வதேச தேரவாத நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்**

முன்னுரை

''சர்வதேச தேரவாத நிறுவனம்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவனமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட நிறுவனத்துடன் தொடர்புபட்ட அதன் குறிக்கோள்களை பயனுற நிறைவேற்றும் மற்றும் எல்லாக் கருமங்களைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன், சொல்லப்பட்ட நிறுவனம் எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண் ணப்பித்துள்ளதாதலாலும் மற்றும் சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும்:

ஆகவே இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

**1**. இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, சர்வதேச தேரவாத நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

சர்வதேச தேரவாத நிறுவனத்தைக் கூட்டிணைத்தல்

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''நிறுவனம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) சர்வதேச தேரவாத நிறுவனம் தற்போதைய உறுப்பினர்களாக வுள்ள மற்றும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப் பட்ட குழுவின் உறுப்பினர்களாக, இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப் பின்னர் ''கூட்டிணைக்கப்பட்ட குழு'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''சர்வதேச தேரவாத நிறுவனம்'' என்னும் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட

குழுவாதல் வேண்டும், அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம், அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத் தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்*

**3.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள், ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்திலான சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு இத்தால் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) பௌத்த போதனைகளுக்கிணங்க, நிப்பனவின் இறுதியான விடுதலையைத் தாமே அடைந்து கொள்வதற்குத் தேவைப்படும் சித்தாந்த அறிவு மற்றும் தியான அறிவு படைத்தவர்களாகவிருப்பதற்கு பௌத்த துறவிகள் மற்றும் சாதாரண பக்தர்களை பயிற்றுவித்தல்;

(ஆ) பௌத்த போதனைகளுக்கிணங்க, நிப்பனவின் இறுதியான விடுதலையை அடைந்துகொள்வதற்கு வேறு பௌத்த துறவிகள் மற்றும் சாதாரண பக்தர்களுக்கு வழிகாட்டுகின்ற இயலுமாந்தன்மைக்கென பௌத்த துறவிகள் மற்றும் சாதாரண பக்தர்களை பயிற்றுவித்தல்;

(இ) சாசனத்தை நிலைநிறுத்தும் நோக்கில், தேரவாத பௌத்த போதனைகளுக்கிணங்க, ஒழுக்கத்தின் (வினாயகம்மாஸ்) முறைப்படியான செயல்களை நிறைவேற்ற பௌத்த துறவிகளைப் பயிற்றுவித்தல்;

(ஈ) தேரவாத போதனைகள் தொடர்புபட்ட புத்தகங்களை மற்றும் ஏதேனும் வேறு வாசிப்பு சாதனங்களை வெளியிடுதல் மற்றும் மொழிபெயர்த்தல்; அத்துடன்

(உ) நிலவுகின்ற சட்டங்கள் மற்றும் கலாசார பெறுமானங்களுக்கு உரிய மதிப்பைக் கொடுத்து உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியான, புத்தரினால் வெளிப்படுத்தப்பட்ட தர்மத்தினை பரப்பும் நோக்கில் சமயப்பணி சார்ந்தவர்களை பயிற்றுவித்து பயன்படுத்துதல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதில், கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, அத்தகைய நடைமுறைப்படுத்துதலானது இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயம், பிறப்பிடம் அல்லது எவையேனும் அத்தகைய வேறு ஏதுக்களில் ஏதேனுமொன்றின் அடிப்படையின் மீதான ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*அரசாங்கத்தின் அல்லது மாகாணசபை யின் அமைச்சினது அல்லது திணைக் களத்தினது பணியுடன் முரண்பாடில்லா திருப்பதனைக் கூட்டிணைக்கப் பட்ட குழு உறுதிப் படுத்துதல்*

**4.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள், கூட்டிணைக் கப்பட்ட குழுவின் பணிக்கும், அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்*

**5.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் 10 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் அமைய, கூட்டிணைக்கப் பட்ட குழுவின் அலுவல்களின் முகாமை செய்தலும் நிருவகித்தலும் 10 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்களைக் கொண்டுள்ள நிறைவேற்றுச் சபையினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கும் நிறைவேற்றுச் சபையின் உறுப்பினர்கள், பந்தி (ஆ) வின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைவாக, இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் முதலாவது சபை நியமிக்கப்படும் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் வரை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்காலச் சபையொன்றாகப் பணியாற்றுதல் வேண்டும்.

(ஆ) பத்தாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இடைக்காலச் சபை இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணின்றி கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால நிருவாகத்துக்கான மற்றும் முதலாவது நிறைவேற்றச்

சபையின் உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான அல்லது நியமிக்கப்படுவதற்கான விதிகளை ஆக்குவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) இடைக்காலச் சபையின் ஏதேனும் முடிபானது அத்தகைய கூட்டத்திற்கு சமுகமளித்திருக்கும் அதன் உறுப்பினர்களின் பெரும்பான்மையோரால் எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது நிறைவேற்றுச் சபையானது, இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து ஓராண்டிற்குள் நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந் தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) போஷகர்களும் மதியுரைஞர்களும் உட்பட, நிறைவேற்றுச் சபையின் பதவிதாங்குநர் ஒவ்வொருவரும் ஆறு ஆண்டுகள் எனும் காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர், போஷகர் அல்லது மதியுரைஞர், மீள் நியமனத்துக்கு அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகவு டையவராதலும் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், நிறைவேற்றுச் சபையின் தவிசாளராக நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனுமாள், ஒன்றில் தொடர்ச்சியானதாகவோ அல்லது வேறுவகையினதான தாகவோ மேலுமொரு தவணைக்கு மாத்திரம் மீள் நியமனத்துக்கு அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநர் ஒருவரின் இறப்பு, பதவிவிலகுதல், உடற்றகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், நிறைவேற்றுச் சபையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண் டும்.

(இ) பந்தி (ஆ) வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள், எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்திற்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செனட் சபை

**6**. தம்ம, வினய மற்றும் நிறைவேற்றுச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட முடிபுகள் தொடர்பான பிரச்சினைகளை கலந்தாலோசிப்பதற்கும் கூட்டிணைக்கப்பட்ட குழு மற்றும் நிறைவேற்றுக் குழுவுக்கான அத்தகைய பிரச்சினைகள் தொடர்பாக கருத்துக்கள், ஆலோசனைகள், முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதற்கு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கௌரவ பிக்குகள் மற்றும் பிக்கு சீடருடனாக அமைத்துருவாக்கப்பட்ட செனட் சபை என அறியப்படும் குழுவொன்றினைத் தாபித்தல்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொது அவை

**7**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொது அவையானது உயர் சபையென அறியப்படுகின்றதுடன் அது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அனைத்து உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பத்தாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பொது அவையின் கடமைகளாவன:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கிணங்க கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிறைவேற்றுச் சபையை தெரிவுசெய்தல்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தலைமையகத்தை இடமாற்றுதல் தொடர்பான முடிபுகளை எடுத்தல்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவினை கலைத்தல் தொடர்பான முடிபினை எடுத்தல்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளை ஆக்குதல் மற்றும் திருத்துதல்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளினால் பொது அவையின் நடைமுறைகளை ஆக்குதல்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிறைவேற்று அலுவல்களை மேற்கொள்வதற்காக நிறைவேற்றுச் சபையொன்றினை தாபித்தல்;

(எ) தேர்தலொன்றின் மூலம் பொது அவையிலிருந்து நிறைவேற்றுச் சபையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்; அத்துடன்

(ஏ) நிறைவேற்றுச் சபையின் அமைத்துருவாக்கம், அத்தகைய சபையின் கீழ்வரும் உபகுழுக்கள், அத்தகைய உப குழுக்களின் உறுப்பினர்களின் செயற்பாடுகள் மற்றும் தகுதிகள் மற்றும் நியமனங்கள் என்பவற்றை விதிகளினால் உருவாக்கல்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் ஒழுக்காற்றுக்குழு

**8**. கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எல்லா உறுப்பினர்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற அத்துடன் பயிலுனர்கள் தொடர்பான எல்லா ஒழுக்காற்று விடயங்களையும் கவனிப்பதற்கான ஒழுக்காற்றுக் குழுவொறாக அறியப்படும் குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் மூலம் ஒழுக்காற்றுக்குழுவின் அமைத்துருவாக்கம், தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் தத்துவங்கள்

**9**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, பின்வரும் தத்துவங்கள் உட்பட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காகத் தேவைப்பட்டக்கூடியவாறான காணிகள் அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கும் வாடகைக்கு எடுக்கவும், நிர்மாணிக்கவும், புனரமைக்கவும் மற்றும்

வேறுவகையாகப் பெற்றுக்கொள்ளவும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் சபையினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறு அவற்றைக் கையாளவும் அல்லது கையுதிர்க்கவும்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்து வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அதன் சார்பில் நேரடியாகவாயினுஞ்சரி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினூடாகவாயினுஞ்சரி அல்லது முகவரினூடாகவாயினுஞ்சரி செய்துகொள்வதற்கும் மற்றும் புரிவதற்கும் அல்லது நிறைவேற்றுவதற்கும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை அடைவதற்காக பிணைப்பொறுப்புக்களுடனோ அல்லது பிணைப்பொறுப்புக்களின்றியோ நிதிகளைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெற்றுக்கொள்ளுவதற்கும்:

ஆயின், சபையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்கு செய்யப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(ஈ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாதனங்கள் என்பவற்றை ஆக்குதல், வரைதல், ஏற்றுக்கொள்ளுதல், கழிப்பனவு செய்தல், புறக்குறிப்பிடுதல், கைமாற்றுதல், வாங்குதல், விற்றல் மற்றும் வழங்குதல் அத்துடன் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தல், செயற் படுத்துதல், பேணுதல் மற்றும் மூடுவதற்கும்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பு அல்லது ஏதேனும் நிலையான அல்லது தனிப்பட்ட ஆதனம் என்பவற்றை பொறுப்பேற்றலும், ஏற்றுக்கொள்ளுதலும் நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிர்வகித்தலும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களையும், ஏனைய ஊழியர்களையும் நியமித்தலும், தொழிலுக் கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும் அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின்படி கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடைகளை அவர்களுக்குச் செலுத்து தலும்;

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம் படுத்தும் நோக்குடன் விரிவுரைகளையும் கருத்தரங்கு களையும் மாநாடுகளையும் ஒழுங்குபடுத்துதலும்;

(ஐ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடைய வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங் கிணைதலும்; அத்துடன்

(ஒ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் அலுவலர்கள் மற்றும் ஏனைய ஊழியர்களைப் பயிற்றுவித்தலும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் விதிகள்

**10.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக்கூட்டமொன்றில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை யொன்றினால் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச் சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை, காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் சட்டமுறையான தாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், உறுப்பினர்கள் விலகுதலும், அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியிலிருந்து நீங்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்களும்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின், நிறைவேற்றுச் சபையின், செனட் சபையின் மற்றும் ஒழுக்காற்றுக் குழுவின் பதவிதாங்குநர்களின் எண்ணிக்கை மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் நிறைவேற்றுச் சபையினதும் செனட் சபையினதும் அல்லது ஒழுக்காற்றுக் குழுவினதும் உறுப்பினராக இருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்;

(இ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின், நிறைவேற்று குழுவின், செனட் சபையின் பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்கல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்கள், மற்றும் ஏனைய ஊழியர்களையும் நியமனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும், அவர்களின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவினது மற்றும் நிறைவேற்றுச் சபையினது, செனட் சபை மற்றும் ஒழுக்காற்றுக் குழுவினது கூட்டங்களைக் கூட்டுவதற்காகவும் அதனை நடாத்துவதற்காகவும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகள் அல்லது அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும் நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்டநடப்பெண்ணும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனங்களின் நிர்வாகமும் முகாமையும்; அத்துடன்

(எ) பொதுவாகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவைக் கலைத்தலும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்பட்டதைப்போன்று அதேபோன்ற கூட்டமொன்றிலும் மற்றும் அதேபோன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள், அத்தகைய விதிகளை ஆக்குவதன்மேல் மூன்று மாதங்களினுள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(4) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் விதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் அத்தகைய ஏதேனும் தேதியன்றுள்ள அறிவித்தலானது வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(6) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு

**11.** நிறைவேற்றுச் சபையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்; இதில், உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்கள் என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் நிதியம்

**12.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒன்பதாம் பிரிவின் (இ) எனும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய கூட்டிணைக்கப் பட்ட குழுவுக்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப் பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக் கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும், நிறைவேற்றுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்

**13.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், தகைமை பெற்றவொரு கணக்காய்வாளரொருவரினால் வருடந்தாம் கணக்காய்வு செய்யப்பட்டு அத்தகைய தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரொருவரினால் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக உள்ளவரும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராக உள்ளவருமான தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்கள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் உள்ளாரோ அக்கணக்காளர்கள் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

வருடாந்த அறிக்கை

**14.** (1) நிறைவேற்றுச் சபையானது ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை, தகைமையான கணக்காய்வாளரொருவரினால் உறுதிப்படுத்தப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்ட

கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து புத்தசாசனம், சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கணக்கு கூற்றொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக் கப்படுதல் வேண்டும்.

*மன்றத்திற்கு வருமதியானதும் மன்றத்திற்கு செலுத்தப்படற் பாலனவையு மான தனிசுகள்*

**15**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று உளதாயிருக்கும் மன்றத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக் களும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத் தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழு அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்*

**16**. இச்சட்டத்தினதும் வேறு எழுத்தினாலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாகவரக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எடுப்பதற்கும் வைத்திருக்கவும் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும், 10 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கான தத்துவத்துடனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*பணங்களையும், ஆதனத்தையும் பயன்படுத்துதல்*

**17.** எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் அல்லது எவ்வாறிருப்பினும் நேரடியாகவோ அல்லது நேரடியாக வல்லாமலோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் இலச்சினை*

**18.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, குழுவின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான ஏதேனும் சாதனத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, நிறைவேற்றுச் சபையினால் முடிபு செய்யப்படக்கூடியவாறான நிறைவேற்றுச் சபையின் பதவிதாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

*கலைக்கப் பட்டதன்மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்*

**19.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடையதும், அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் தோதான நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, பொதுக்கூட்டமொன்றில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு கலைப்புக்கு நேர்முன்னர் தோதான நிறுவனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**20.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளை அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளை பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசின் உரிமைகளைப் பேணுதல்*

**21.** இச்சட்டம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலன்றி:-

*பொருள் கோடல்*

''வங்கி'' என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தில் கருத்தெல்லைக்குட்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று எனப் பொருள்படும்;

''எழுத்திலான சட்டம்'' என்பது, அரசியலமைப்பிலுள்ள அத்தகைய சொல்லைமைப்பின் குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருளினை குறித்தளிக்கும்.

**22.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*